செய்தி வெளியீடு எண் : 1176 நாள் : 14.06.2023

## செய்தி வெளியீடு

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்களின் தலைமையில் இன்று 14.06.2023 2023–2024ஆம் ஆண்டின் கைத்தறி மற்றும் துணிநூல் துறைகளின் அறிவிப்புகள் செயலாக்கம் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் எழும்பூர் கோ–ஆப்டெக்ஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சட்டமன்றப் பேரவை அறிவிப்புகளில், செயலாக்கத்தில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்கவும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் உரிய அறிவுரைகள் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், ஆரணியில் அமையவுள்ள டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு பட்டு கைத்தறி பூங்கா குறித்து, பூங்கா அமைப்பாளர்கள் மற்றும் Consultant ஆகியோருடன் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, விரைந்து முடித்திட அறிவுரை வழங்கப்பட்டது.

துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ததுடன், கூட்டுறவு நூற்பாலைகள் நடப்பாண்டில் இலாபத்தில் செயல்படுவது குறித்து பாராட்டு தெரிவித்தார்,

மேலும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளில் இலாபத்தில் செயல்படுவதை பாராட்டியதுடன், நடப்பாண்டில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனையினை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டியதற்கு தகுந்த திட்டங்கள் வகுத்து செயல்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ் இ.ஆ.ப., துணிநூல் துறை ஆணையர் திரு.மா.வள்ளலார், இ.ஆ.ப., கைத்தறி துறை ஆணையர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in